<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

**<u>OS</u>** <u>199/2009</u>

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ம் Pw2 நாள் தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 25.11.2025

Pw 2(சுப்பிரமணியம்)

**<u>குறுக்கு விசாரணை (10 ம் பிரதிவாதி தரப்பில்)</u>**

எனக்கு தமிழ் படிக்கத் தெரியும். வாதி தரப்பு சாட்சி 1 முதல் விசாரணையில் பத்தி 7 ல் சொல்லியுள்ள சென்னிமலை கவுண்டர் மகன் பொங்கியண்ண கவுண்டர் என்பது என் தகப்பனாரை தான் சொல்லியுள்ளார்கள். வாதி எனக்கு மாமன் மைத்துனர் உறவு முறை. வழக்கில் சம்பந்தப்பட்ட சென்னிமலை கவுண்டர் மகன் பொங்கியண்ண கவுண்டர் என் தகப்பனாரை குறிக்காது என்றால் சரிதான். தாவாவில் சொல்லப்பட்டுள்ள பொங்கியண்ண கவுண்டருக்கு பாத்தியப்பட்ட 31 ஏக்கரில் எனக்கு எவ்வித பாத்தியதையும் இல்லை என்றால் சரிதான். பொங்கியண்ண கவுண்டருக்கு பாத்தியப்பட்ட 31 ஏக்கர்நிலம் யார் யாருக்கு எப்படி பிரிந்தது, ராமகிருஷ்ண ஐயங்காருக்கு எப்படி பாத்தியம் போன்ற விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ராமகிருஷ்ண ஐயங்காருக்கு பாத்தியப்பட்ட சொத்தை சென்னிமலை கவுண்டரின் வாரிசுகள் குத்தகைக்கு ஓட்டி வருவதாக சொல்லியுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்து எவ்வளவு விஸ்தீரணம் என்றால் சுமார் 4 ஏக்கர் இருக்கும். பூர்வீக சொத்து வகையில் எவ்வளவு நிலம் எவ்வளவு ஓட்டி வருகிறார்கள், குத்தகை நிலம் எவ்வளவு நிலம் ஓட்டி வருகிறார்கள் என்று எனக்கு பிரித்து சொல்ல முடியாது என்றால் சரிதான். வழக்கில் சாட்சியம் அளிக்க தங்கராஜ் மற்றும் சரவணன் என்னை அழைத்தார்கள். என்ன வழக்கு , என்ன சாட்சியம் அளிக்க வேண்டும என என்னை வழக்கறிஞர் அலுவலகத்திற்கு அழைததுச் சென்று விவரம் சொன்னார்களா என்றால் இல்லை. எனது முதல் விசாரணை வாக்குமூல விவரங்களை என் மருமகள்

தயார் செய்தார். நான் சொல்லி என் மருமகள் முதல் விசாரணை வாக்மூலத்தை தயார் செய்து கொடுத்தார். நான் வாதியிடம் ஆதாயம்பெற்றுக் கொண்டு அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2025.11.25 18:41:46 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS